**கொழும்பு நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டம் (எஸ்சீயூஆர்பீ) - 2022**

---

கொழும்பு நகர மீளுருவாக்கலிற்கு ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் (எஸ்சீயூஆர்பீ) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் (ஏஐஐபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய எல் 0081 ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 3.4.3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சானது நிறைவேற்றல் முகவராக காணப்படுகின்றதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் முறைமை முன்னேற்றங்களுடன் வருமானம் குறைந்த சமூகங்களின் வீடமைப்பு நிலைமைகளை உயர்த்துதல், இயலுமான வகையில் வீடமைப்பு மற்றும் காணியினை மீள் அபிவிருத்தி செய்தல் போன்றவற்றில் முதலீடுவதனூடாக கொழும்பில் காணிப் பயன்பாட்டின் வினைத்திறனை உயர்த்துதல் போன்ற செயற்திட்டத்தின் நோக்கங்களாகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 50,460 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 287 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 35,163.7 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொ 200 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் (ஏஐஐபீ) நிதியளிக்க இணங்கப்பட்டிருந்தது. மிகுதித் தொகையான ரூபா 14,417.2 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்திலிருந்து நிதியீட்டம் செய்வதற்கு இணங்கிருந்தது. மேலும் ஐ.அ.டொலர் 5 மில்லியனுக்குச் சமமான ரூபா 879.1 மில்லியன் தனியார் பங்காளரால் நிதியளிக்கப்பட்ட இணங்கப்பட்டது.

செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2019 யூலை 22 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2025 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட்ட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், 2022 யுலை 01 ஆந் திகதி திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் (ஏஐஐபீ) அவசர சுகாதார கூறிற்கு ஐ.அ.டொ 70 மில்லியன் நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டதன் காரணமாக ஆரம்ப செயற்பாடுகளின் விடயப் பரப்பு மாற்றப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 02 ஆம் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

- இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல | கணக்கீட்டு குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | ஸ்டேடியம் கம கொழும்பகே மாவத்தை செயற்திட்டத்திற்குரிய 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிறைவேற்றப்பட்ட வேலைப் பெறுமதி அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி மற்றும் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய பணம் அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 1,166.13 | நாங்கள் 2023 ஆம் ஆண்டு முதல் இதனை பின்பற்றுகின்றோம். | நிதிக் கூற்றுக்களில் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | வேலைத் தளத்தில் உள்ள பொருட்களுக்காக செலுத்தப்பட்ட முற்பண பெறுமதி நடைமுறைச் சொத்தாக காண்பிப்பதற்கு பதிலாக நடைமுறை வேலையான கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் விளைவாக நிதிக் கூற்றுக்களில் நடைமுறை வேலைகளின் பெறுமதி அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 249.41 | நாங்கள் 2023 ஆம் ஆண்டு முதல் வேலைத்தளத்தில் உள்ள பொருட்களின் பெறுமதியை நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கின்றோம். | நிதிக் கூற்றுக்களில் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இன் 39(அ) பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் வெளிநாட்டு கடன் தொடர்பான சீராக்கம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 301.36 | இணக்கம் செய்வதற்காக அரசின் கணக்கு அல்லது அதன் விபரங்கள் எங்களுக்கு கிடைத்திருக்கவில்லை. | சமப்படுத்தல் சீராக்கங்களை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.1(அ மற்றும் (ஆ) | ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு, சுற்றாடல் தாக்கங்களின் மதிப்பீடு, சமூக தாக்கங்களின் மதிப்பீடு மற்றும் செயற்திட்டத்திற்குரிய ஏனைய சகல முன்னரே பெறுகைகளை தயார் செய்தல் மற்றும் காணிகளை கைப்பற்றுதல் மற்றும் பயன்பாடுள்ள மீள் குடியமர்த்தல் இடங்களை உள்ளடக்கிய இழப்பீடு மற்றும் மீள்குடியமர்தல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேவையான சகல விடயங்களையும் பூர்த்தி செய்தல் தொடர்பாக நிறுவனம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட வழிகாட்டிகளுக்கு முரணாக செயற்திட்ட நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அபிவிருத்தி செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன் ஆறு செயற்திட்டங்களுக்காக ஆரம்ப திட்டம் விடுவிப்பு (PPC) நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து பெறப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | கடன் உடன்படிக்கையின் 02-D பட்டோலை | 2023 மார்ச் 30 ஆம் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் கொள்கை கட்டமைப்பு தயாரித்து அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மீள்குடியமர்த்தல் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்து உடனடியாக வங்கிக்கு அனுப்ப வேண்டிய போதிலும், 3½ வருடங்களின் பின்னரும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவ கட்டமைப்பு (ESMP) மற்றும் மீள்குடியமர்த்தல் திட்ட கட்டமைப்பு (RPF) என்பன தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக AIIB இற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடன் உடன்படிக்கையின் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக செயல்முன்னேற்றம்

| கூறு | | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப் பட்ட பௌதீகச் செயலாற்றல் சதவீதம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | கொழும்பகே மாவத்தை | 74.28 | 52.26 | 2020 யூன் 01 ஆம் திகதி 624 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 3,595.56 மில்லியனுக்கு மாகா பொறியியல் கம்பனிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.<br>செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,793.08 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 1,902.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென நிரற்படுத்தப்பட்ட 2023 ஆகஸ்ட் 24 ஆம் திகதியிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | கொவிட்ட 19 தொற்று நோய், பொருளாதார நெருக்கடி, மின்சாரம் துண்டிக்கப்பட்டமை காரணமாக இருந்தது. | பூகோள ரீதியில் தாக்கத்திற்கு உட்பட்ட கொரோன 19 தொற்று நோய் மற்றும் சுகாதார அதிகாரிகளினால் விநியோகிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டிகளின் காரணமாக செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் அதிக தாக்கத்திற்கு உட்பட்டிருந்தது. | கால அட்டவணையில் பூர்த்தி செய்வதற்காக நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பாக மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒபேசேகரபுர | 2022 மார்ச் 29 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | | 300 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,981.85 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் சுபசிங்க கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனிக்கு நிர்மாண ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன், நிர்மாண நடவடிக்கைகள் 2020 மே 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், நலிவான செயலாற்றலின் காரணமாக 2022 மார்ச் 29 ஆம் திகதி | செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்னர் இடைநிறுத்தப்பட்டிருந் தது. | செயற்திட்டத்தை முடிவுறுத்தியதன் காரணமாக மீண்டும் கேள்வி கோருவதற்காக SCAPC இற்கு உதவுவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு (TEC) நியமிக்கப்பட்டிருந்ததுடன் , ஆரம்ப வரைவு கேள்வி ஆவணங்கள் | கால அட்டவணையில் பூர்த்தி செய்வதற்காக நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பாக மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | இந்த செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், அது வரையில் 14 சதவீத செயல் முன்னேற்றம் மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 300 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், ஒபேசேகரபுர வீடமைப்பு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட காலம் கடந்திருந்த போதும் நலன்களை பெற்றுக் கொள்வதற்கு செயற்திட்டம் மற்றும் வரிசை அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், கருத்தை பெற்றுக் கொள்வதற்காக AIIB இற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனால் மீண்டும் கேள்வி கோரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது . | |
| (இ) | அபல்வத்தை | 64.00 | 21.67 | இந்த வீடமைப்பு திட்டம் ஊடாக 700 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 4,473 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் (சைனா ரயில்வே 25 ஆவது லிமிடெட்) கூட்டு முயற்சி இற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த செயற்பாடுகள் 2020 ஒப்டோபர் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஒக்டோபர் 17 ஆம் திகதி முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2020 ஆம் ஆண்டின் கேள்வி மதிப்பீட்டின் போது கேள்வி தாரர்களினால் கைளிக்கப்பட்ட ரூபா 43.3 மில்லியன் பணம் காசுக் கழிவு கவனத்தில் கொள்ளப்படாமையின் காரணமாக ரூபா 10.9 மில்லியன் நட்டம் ஏற்பட்டமை தொடர்பாக அமைச்சு எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | கொவிட் 19 தொற்று நோய், பொருளாதார நெருக்கடி மற்றும் மின்சாரம் துண்டிப்பு காரணமாக இருந்தது. | கொரோனா 19 தொற்று நோயின் காரணமாக அதிகமாக தாக்கத்திற்கு உட்பட்டிருந்ததுடன், கடந்த சில ஆண்டுகளில் பொருளாதார நெருக்கடிகளும் செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு காரணமாக இருந்தது. | மிகுதி வேலைகளை விரைவாக செய்து முடிப்பதற்கு சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஈ) | பேகுசன் வீதி | 76.61 | 6.88 | 750 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,511 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் சீனா சிவில் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும் மற்றும் சீனா ரயில்வேஸ் 25 என்ற கம்பனிக்கும் நிர்மாண ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. ஒப்பந்தம் 2021 சனவரி 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2024 சனவரி 04 ஆம் திகதி பூர்த்தி செய்தவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது, | கொவிட் 19 தொற்று நோய், பொருளாதார நெருக்கடி மற்றும் மின்சார துண்டிப்பு காரணமாகும். | கொரோனா 19 தொற்று நோய் மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றலுக்கு அதிக தாக்கம் ஏற்பட்டிருந்தது. அதனால் கால நீடிப்பு (EOT) எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மிகுதி வேலைகளை விரைவாக செய்து முடிப்பதற்கு சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மாதம்பிட்டி | 32.76 | 14.89 | துடாவ பிரதர்ஸ் தனியார் கம்பனிக்கு 700 வீட்டு அளவுகளை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 4,529.26 மில்லியனுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2020 மே 24 ஆம் திகதி ஆரம்பித்து 2024 மே 03 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்து, தொழிலாளர் மேற்பார்வை மற்றும் நலிவான மேற்பார்வை ஒப்பந்தத்தின் நலிவான செயல் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | கொவிட் 19 தொற்று நோய், பொருளாதார நெருக்கடி மற்றும் மின்சார துண்டிப்பு காரணமாகும். | கொரோனா 19 தொற்று நோய் மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றலுக்கு அதிக தாக்கம் ஏற்பட்டிருந்தது. அதனால் கால நீடிப்பு (EOT) எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மிகுதி வேலைகளை விரைவாக செய்து முடிப்பதற்கு சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பயனற்ற செலவினம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | செயற்திட்டத்தின் நிதியத்தை செயற்திறனான முறையில் பயன்படுத்துவதன் காரணமாக அந்த கடன் தொகை ஐ.அ.டொலர் 70 மில்லியனால் குறைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அதன் விளைவாக 3 ஆவது கட்டத்தின் செயற்திட்ட செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்ததுடன், வீட்டு நலனாளிகளின் எண்ணிக்கை 1,272 இனால் குறைவடைந்திருந்தது. | அத்தியவசிய மருந்துகள் மற்றும் மருந்து வழங்கல்களை வழங்குவதற்கான இரண்டு செயற்திட்டங்களில் ஐ.அ.டொலர் 100 மில்லியன் தொகையை (ஐ.அ.டொலர் 70 மில்லியன் SCURP இலிருந்தும், ஐ.அ.டொலர் 30 மில்லியன் RLVMMP இலிருந்தும்) மீள அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயற்திறனாக நிதிய முகாமைத்துவ முறைமையொன்றை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | ஆரம்ப கிரய மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ஐ.அ.டொலர் 42 மில்லியன் ஆகும். எனினும் அது ஐ.அ. டொலர் 28 மில்லியன் வரை ஐ.அ.டொலர் 14 மில்லியனால் குறைவடைந்திருந்தது. மேலும் திருத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக தனியார் கூட்டு முயற்சி பங்களிப்பு முழுமையாக அகற்றப்பட்டிருந்தது. | இது ட 2021 யூலை 01 ஆம் திகதி வெளிநாட்டு வள திணைக்களத்தால் (ERD) மீள்கட்டமைப்பு கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அனுப்பப்பட்டதாகும். | செயற்திட்டத்தின் நிதியீட்ட மூலங்களை கண்டறிவதற்கு ஆக்கபூர்வமான நடவக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டம் 2022 திசெம்பர் 31 வரை ரூபா 372.39 மில்லியன் கடப்பாட்டு கட்டணம் மற்றும் ரூபா 366.33 மில்லியன் வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் நலிவான செயல்முன்னேற்றத்தின் காரணமாக ஐ.அ.டொலர் 130 மில்லியன் கடன் தொகையில் ஐ.அ. டொலர் 40 மில்லியனை மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2020, 2021 இன் போது கொவிட் தொற்று நோயின் காரணமாகவும், 2022 ஆம் ஆண்டின் போது நிதி நெருக்கடியின் காரணமாகவும் செயற்திட்டம் மெதுவாக இருந்தது. | குறித்துரைத்த செயற்திட்ட கால எல்லையில் நிதியத்தை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| SCURP இன் 4 செயற்திட்டங்களுக்காக செலுத்துகின்ற திகதியில் ஒப்பந்தகாரருக்கு அவ்வப் போதான விகிதத்தில் செலுத்தும் போது பல்வேறு டொலர் விகிதம் மற்றும் இலங்கை ரூபாய்களில் செலுத்துவதற்கு இணங்கியதன் காரணமாக இணங்கப்பட்ட ஒப்பந்த தொகைகளை விட ரூபா 970.68 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட இவ்வாறான பாதகமான நிபந்தனைகள் தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினையான நிலைமை ஏற்பட்டிருந்தது. | தொழில்நுட்ப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பிரச்சினைகளை சரிசெய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத / குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தை அமுல்படுத்தும் கைநூலின் பிரகாரம் 02 கூறுகளை உடைய காணி அபிவிருத்தி செயற்திட்டம் 11 இன் கீழ் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 111.5 ஏக்கர் நில அளவை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதியின் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 6 சதவீதமே அடையப்பட்டிருந்தது. | நாட்டில் பொருளாதார நிலைமையின் காரணமாக நிதியமைச்சு மற்றும் NPD ஒன்றிணைந்து நிதியத்தின் நிதி ஏற்பாட்டை உச்சப்படுத்துவதற்காக ஆலோசணைகளை மீண்டும் கவனத்தில் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கேர்குசன் வீதி வீடமைப்பு திட்டத்திற்காக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், சுற்றாடல் ஆலோசனை சபை, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை என்ற நிறுவனங்களில் 02 வருடங்கள் முழுவதும் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்குரிய நீர் வடிகாலமைப்பு கழிவுப் பொருள் சுத்தகரிக்கும் பிரச்சினைகளின் காரணமாக பேர்குசன் வீதி சுற்றாடல் விடுவிப்ப மற்றும் கட்டிட அனுமதிப் பத்திரம் தாமதமாகி இருந்ததுடன், அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உரிய அங்கீகாரம் குறித்துரைத்த நேரத்தில் பெறப்படல் வேண்டும். |

### 3.6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டு ஆதனமாக வீடமைப்பு திட்டம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் எதிர்காலத்தில் வீடமைப்பு உத்தேச திட்டங்களை பேணிச் செல்லல் மற்றும் அமுல்படுத்துவதற்கான செலவினங்கள் அரசுக்கு பொறுப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தை மீண்டும் பதிவு செய்யும் கொள்கை வழிகாட்டலின் பிரகாரம் மீண்டும் மீள்குடியமர்த்தல் முடிவடைந்ததன் பின்னர் ஒவ்வொரு வீட்டு திட்டங்களுக்காகவும் கூட்டு ஆதனமாக கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். | வீடமைப்பு செயற்திட்டம் புலமைச் சொத்தாக பதிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | புதிய வீடமைப்பு உத்தேச திட்டத்திற்காக உத்தேசிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் நலனாளிகள் 2023 ஏப்ரல் வரையும் செயற்திட்டத்தினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சமூக பொருளாதார அடிப்படை ஆய்விற்காக பொருத்தமான ஆலோசனை சேவையொன்றை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக PMU புதிய பெறுகை செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. | உத்தேசிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |